மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 336, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

336–

வெம்பக்கோட்டை ஒன்றியம், குகன்பாறைக்கு குடிநீர் வசதி அளித்தல்.

***21059– திரு. ஜெ. பாலகங்காதரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், குகன்பாறை கிராமத்தில் போதிய குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வெம்பக்கோட்டை ஒன்றியம், குகன்பாறை கிராமத்திற்கு 15,000 லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் 1983-ல் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இத்திட்டத்திற்கான நீராதாரம் குறைந்துவிட்டதால் புதிய நீராதாரம் அமைக்கும் பொருட்டு ரூ.0.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிராதாரம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் நடைப்பெற்று வருகிறது.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் என்னென்ன சலுகைகள், எங்கெங்கே, எப்படி செய்ய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றையதினம் ஒரு நல்ல பதிலை தந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் குகன்பாறை என்ற கிராமத்தைச் சுற்றி பாறை உள்ளதால் அங்கே தண்ணீர் ஆதாரம் கிடைக்க வாய்ப்பே இல்லையென்ற சூழ்நிலையில், கிட்டத்தட்ட 4, 5 கிலோமீட்டர் தள்ளி தான் நீராதாரம் இருக்கிறது. அங்கேயிருந்துதான் இந்த குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்ற சூழ்நிலையில் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த தொகை என்பது மிகக் குறைந்த தொகையாகும். என்வே, அதனை அதிகரித்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து

1994 ஏப்ரல் 21]

இருக்கிற இந்த குகன்பாறை கிராமத்தில் சுமார் 930 அளவுக்கு மக்கள்தொகை இருந்து வந்திருக்கிறது. இந்த கிராமத்தில் ஏற்கெனவே 15000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு, அங்கேயிருக்கிற நீராதாரம் குறைந்திருக்கிற காரணத்தால்தான் இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது என்று ஏற்கனவே தெரிவித்து இருந்தேன். அப்படி அந்த நீராதாரத்தைப் பெருக்குகிற வகையில்தான் இன்றைக்கு 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி 'நீராதாரம் எங்கு அதிகமாக இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, இந்த மக்கள் தொகைக்கு ஏற்ப, அங்கே ஏற்கனவே நிறுவப்பட்டிருக்கிற தொட்டியையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், இன்றைக்கு ஒரு முறையான மதிப்பீட்டை தயாரித்து இருக்கிறார்கள். அப்படி உண்மையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆய்வுப் பணிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவானது என்று கருதுவார்களானால், நிச்சயமாக அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும், தேவைக்கேற்ப சரியான மதிப்பீடும் அங்கே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 கிலோமீட்டர் என்றால் பைப்லைன் என்பதற்கே கிட்டத்தட்ட 2 இலட்சம், 3 இலட்சம் ஆகிவிடும். எனவேதான் இந்தத் தொகை குறைந்த தொகை எனறு சொல்கிறேன். இன்றையதினம் அங்கே அருகிலே கிடைக்கிற, ஏற்கனவே குறைந்துவிட்ட நீராதாரமானது சற்று குடிக்க முடியாத, உப்புத் தண்ணீராக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அந்த மேல்நிலை 'நீர்த் தேக்கத்தொட்டி நன்றாக அமைக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தண்ணீர் 4, 5 கிலோமீட்டர் தூரத்திலிருந்து கொண்டு வந்து ஏற்றப்பட்டால் நமக்கு நல்ல பெயராக இருக்கும் என்ற காரணத்தால்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்த கேள்வியைக் கேட்டேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை இந்த ஆண்டே ஆவன செய்து, அந்தத் தொகையை வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு ஒரு மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது இந்த குடிநீர் பிரச்சினை தான். எங்கெல்லாம் இந்தப் பிரச்சினை இருக்கிறதோ, அது அரசின் கவனத்திற்கு வருகிறதோ, அந்தப் பிரச்சினையை எல்லாம் களைகிற வகையில்தான் இன்றைக்கு அரசு மிக விரைவாக பணிகளை மேற்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இன்றைக்கு எவ்வளவு தூரத்தில் நீராதாரம் கிடைத்தாலும், அந்த நீராதாரத்தை வைத்து, கட்டப்பட்டிருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் கொண்டு வர வேண்டியது அவசியம் என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், ஆய்வுப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டது. அந்த ஆய்வுப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை போதாது என்று சொன்னால், நிச்சயமாக அதையும் அரசு ஆய்வு செய்யும் என்று தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். இன்றைக்கு அங்கே வழங்கப்பட்டு இருக்கிற தண்ணீர் குடிப்பதற்குச் சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், குகன்பாறை கிராமத்தில் மட்டும் இன்றைக்கு 5 கையிறைப்பான்கள் இருந்து வருகின்றன. அந்த 5 கையிறைப்பான்களில் 2 கையிறைப்பான்களிலிருந்து வருகின்ற நீர் குடிக்கக்கூடிய தன்மையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது,. என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலே. அதேபோல், ஒரு திறந்தவெளி கிணறும் இருக்கிறது. அதிலேயிருந்து கிடைக்கப்பெறுகின்ற நீரும் குடிப்பதற்கு தகுந்ததாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். நிச்சயமாக இந்த ஆண்டே இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவை அரசு ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 337, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

337–

சிறுவாணி அணைக்கட்டு நீர் வழங்கும் பணியைப் பராமரிக்கும் பொறுப்பை கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் ஒப்படைத்தல்.

***22361––திரு. கே. செல்வராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா––

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குக் குடிநீர் வரும் சிறுவாணி அணைக்கட்டு நீர் வழங்கும் பணியைப் பராமரிக்கும் பொறுப்பை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும்?